உ

கடவுள் துணை.

சாஸ்திரக்கோடியோனாகிய
சகாதேவர் அருளிச்செய்த

தொடுகுறிசாஸ்திரம்.

111	112	113	114	121	122	123	124
131	132	133	134	141	142	143	144
211	212	213	214	221	222	223	224
231	232	233	234	241	242	243	244
311	312	313	314	321	322	323	324
331	332	333	334	341	342	343	344
411	412	413	414	421	422	423	424
431	432	433	434	441	442	443	444

திண்டுக்கல் புக்செலர்
K. V. நாராயண அய்யர்
அவர்களால்
மதுரை வடக்குமாசிவீதி,
மனோன்மணி விலாச அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை) 1926. (அணா2.

உ.

கடவுள்துணை.

நூன்முகம்.

விருத்தம்.

பூலோகமானிடர்கள் பிழைக்கவேண்டி பொய்யுரையா பாண்டவருக்கிளையதம்பி, சாலோகசாஸ்திரமுந்தெரிந்தஞானி சாஸ்திரத்தின் கொடியுடைய சகாதேவன் தான், காலாகாலத்தினுட நிலமை காணக்·கார்மேக வண்ணனது கருணைகொண்டு, மேலானதொடுகுறியை மொழிந்ததாலே மேதினியிலேகாம்பரம் வெளியிட்டானே.

சாமியென்று னுள்ளன்பு மிருக்கவேண்டும் சக்ரவர்த்தியானாலும் பக்திவேணும், காமிகளாய்த் திரிபவர்க்கு வெட்கமில்லை கைகண்டதொடுகுறியே கடப்பதில்லை, பூமியிலே யிந்நூல்தான் வெளிவந்தாலும் புத்தியில்லா மூடருக்குப் புலப்படாது, வாமியுடமூத்தவனாருளினாலே வரைந்திட்ட சகாதேவன் வாக்கைப்பாரே.

பாரப்பாவாக்குநிலை கண்டபோதும் பந்தயமாய் மாயச்சூதாடும்போதும், துரோபதை துகிலதனை யுரியும்போதும் துணையிழர்த வனவாசம் போகும்போதும், சீரப்பாவிராடனிடம் சேரும்போதும் சிற்றமராய் மாடுபிடிசண்டைபோதும், ஆரப்பாகார்மேகன் காப்பேனென்று அருகிருந்து சொன்னதோர் குறியிதாமே.

தொடுகுறியின் சாஸ்திரத்தின் துணையினாலே தொல்லுலகைப் பறிகொடுத்தே துஞ்சவில்லை, வடிவான தொடுகுறியின் வலுவினாலே வனவாசம்சென்றவரும் வாடவில்லை, படியின்மிசைசகாதேவனெழுதிவைத்த பாங்கான கணிதவகை தொண்ணூற்றாறில், அடைவான தொடுகுறியே போதுமென்று அன்புடனே நாதாக்களடுத்திட்டாரே.

நாதாக்க ளடுத்தமொழி பொய்யாகாது நம்பாத மடையருக்கு மெய்யாகாது, வேதாந்த ஞானிசகா தேவனாலே விளம்பிவித்த தொடுகுறியே வீண்போகாது, ஆதாரமிதைவிட வேறினங்கிட்டாது அண்டசரா சரத்திற்கு மடுத்தநூலாம், தீதுடனே நன்மையிரண்டுந் தெரிந்துகொள்ளத் தெளிவாக விபரமதைத் தெரிவிப்பேனே.

தெரிந்திடவே வட்டமாய் மெழுகிமைந்தா தெரிவையர்கள் மஞ்சளினால் கணேசன்வைத்து, அருகினிலே தாம்பூலம் கதலிவெல்லம் அனுவேனும் கற்பூரம் கொளுத்திவைத்து, பரிவாகவேவணங்கும் குல தெய்வத்தைப் பாண்டவரைச் சிந்தையிலே பதியவைத்து, சிறுவயதாங்கன்னியிடம் மலரையீய்ந்து சக்கரத்தி லெதுவேனுந் தீண்டச் சொல்லே.

தீண்டியதோர் லக்கமதைக் குறித்துக்கொள்ளு·தெய்வமொழிப் பாட்டுதனைத் தேடிப்பாரு, வேண்டியே தொட்டதொரு லக்கம் போலே விளங்குகின்ற செய்யுள்தனை வாசித்தாக்கால், கண்டீபன் தம்பியுட கருணையாலே கலக்கமது விலகுமடா கண்ணாடிபோல், பாண்டவர்கள் தொடுகுறியைப் பரீட்சிப்போர்க்குப் பாவை துரௌபதை கிருபை பலிக்கும்பாரே.

நூன்முகம் முற்றிற்று.

சீதா சக்கரம்.

1	7	8
3	2	6
5	9	4

1-லாபம் 4-பீடை 7-தனம்

2-நாசம் 5-க்ஷேமம் 8-மரணம்

3-சிநேகம் 6-கலகம் 9-பிரீதி

இந்தச் சீதா சக்கரத்தில் கண்ட நெம்பரை ஒரு சிறுவனைக் கைகால் சுத்திசெய்துவரச்சொல்லி ஒரு புஷ்பங்கொடுத்து நெம்பரைத்தொட்டச்சொல்லி பலன்களைத் தெரிந்துகொள்ளவும்.

உ

கடவுள்துணை.

சகாதேவர் அருளிச்செய்த

தொடுகுறி சாஸ்திரம்

நன்மை தீமை அறியும்படியான சக்கரம்.

111	112	113	114	121	122	123	124
131	132	133	134	141	142	143	144
211	212	213	214	221	222	223	224
231	232	233	234	241	242	243	244
311	312	313	314	321	322	323	324
331	332	333	334	341	342	343	344
411	412	413	414	421	422	423	424
431	432	433	434	441	442	443	444

விருத்தம்.

பேர்வளரும் ஆறென்னும் சாஸ்திரத்தில்
　பேசியதோர் தொடுகுறியின் பெருமைகேளீர்
சீர்வளரும் ஐவருக்கு மிளையதம்பி
　சிரஞ்சீவி சகாதேவர் சொன்னவாக்கு
கார்வளர்போல் கண்டுமனந் தெளிவதற்குக்
　கருணைமொழி சிவனயன்மால் குகனுஞ்சாட்சி
தார்வளர்மேல் இப்பொருளை வெளிதாய்ச்செய்ய
　தகுபஞ்ச பாணிசுதன் காப்புதானே.

காப்பு—விருத்தம்.

பஞ்சபாண்ட வரின்பாதம் பலதின மறவாய்போற்றி
துஞ்சமா யெவர்க்குநன்மை தொடுகுறி நூலைச்சொல்ல

செஞ்சிமாநாகரம்வாழும் சிறுவனேகாம் பரந்தான்
தஞ்சமாய்க் குருவின்பாதம் தான்பணிந் தேற்றினேனே.

111-வது விருத்தம்.

அரியவே நூற்றிப்பதி னொன்றைத் தொட்டாய்
அப்பனே கேட்குமொரு சேதிகேளு
குறைவின்றிக் காரியங்கள் ஜெயமே யாகும்
கொற்றவனே ஒருவருடம் குறைவேயில்லை
பெருமையுட னெதிரியை நீ வெல்வாயப்பா
பேசியதோர் நாள்கிரகம் வீட்டுநன்மை
குருமொழிபோல் சொன்னகுறி உண்மை காண
குறிப்புண்டு வலத்தோளில் மச்சந்தானே.

வ-ம்— நீ நினைத்தகாரியம் ஜெயமாகும்- எதிரியை நீ வெல்வாய் தொட்டவேளையும் நன்றாயிருக்கிறது. உன் வீட்டுக் காரியமும் ஜெயமாகும் இந்த ராசி உனக்கு ஒருவருடம் குறைவில்லாமல் இருப்பாய் இதற்கு அடையாளம் வலதுபுயத்தின்பேரில் மச்சமிருக்கும் பார்க்கவும்.

112-வது விருத்தம்.

நன்மையென்றயோசனையை மனதிலெண்ணி
நாட்டமாய்நூற்றிப்பனி ரெண்டைத்தொட்டாய்
உன்னுடைய மனம்போலே முடியாதப்பா
ஒருவராக்ஷேபனையாம் திண்ணமாகும்
மன்னவனேயுன் மனைவி யுளவுமுண்டு
மாகாளியுருவமதைப் படைத்தமாது
தன்மையாய் மனம்போலே நடப்பதற்கு
தளராமல் தேவதைக்குப் பூசைபோடே.

வ-ம்— நீ நல்லகாரியத்தை மனதில் நினைத்துத் தொட்டாய் அந்தக் காரியம் கைகூடாது அதுயேனென்றால் உன் பெண்சாதி நடுவில் தூதாயிருக்கிறாள் ஆனபடியால் அந்தக்காரியம் தாமசத்தில் கூடும் குலதேவதைக்குப் பூஜைபோடு பலிக்கும்.

113-வது.

கேளப்பா நூற்றிப்பதின் மூன்றைத்தொட்டாய்
கிருபையாய் கேட்குமொரு சேதிகேளு
தாளப்பா புத்திரர்கள் தழைத்து வாழ்வாய்
தனலாபங் குறையில்லை மிகவேயுண்டு
வாளப்பா ஜெயகால முதவியாச்சு
மைந்தனே படுந்துன்பம் விலகிப்போச்சு
கேளப்பா சொன்னமொழி நம்பிப்பாரு
கீர்த்தியுள்ள குருமுனியுங் காப்பார்தானே.

வ-ம் நீ தொட்டகுறி தனலாபங் கிடைக்கும் புத்திரபாக்கிய மூண்டு மனக்கவலைநீங்கி சந்தோஷமடைவாய் உனக்கு கிரகங்கள் நல்லதாயிருக்கிறது அதனால் சுகமுண்டு உத்தமம்.

114-வது

மைந்தனே நூற்றிப்பதினாலைத் தொட்டாய்
மகாநன்மைவருத்தமது விலகிப்போச்சு
சிந்தை தயதுகளித்திடுவாய் லாபமுண்டு
சீமான்போ லுனக்கொருவர் உதவியாவார்
வந்திடுவாரின்னமூன்று மாதத்தின்மேல்
வளமாககுருவுனக்குப் பலனைக்கூட்ட
இந்தவிதம்யார்சொல்வார் சித்தர்சொல்வார்
இயம்பியசகாதேவர் நூலைநம்பே

வ-ம் நினைத்தகாரியம் நன்மையாகும் அது ஒரு சிநேகிதரால் உதவியாகும் லாபங்கிடைக்கும் உனக்குயின்னம் மூன்றுமாதத்தின் மேல் குருநல்லவனாகவருவார் உத்தமம்.

121-வது

தொட்டதொரு லக்கத்தின் விபரங்கேளு
தொல்லையென மனவருத்தம் விலகிப்போச்சு
இஷ்டகுல தேவதைக்கு பூசைபோடு
யெதிர்படவே சிநேகிதரால் உதவியாகும்
நஷ்டமில்லை வியாபாரம் பலிக்குமப்பா
நயமென்றே யுன்மொழியை நம்புவார்கள்
கெட்டியென்றே முன்னோர்கள் சொன்னவாக்கை
கேட்டுநீ நம்பியுந்தன் கவலைதீரே

வ-ம் நீதொட்டலக்கத்தின் மனவியாகூலந்தீரும் ஒரு சிநேகிதனால் உதவியுண்டு லாபங்கிடைக்கும் குலதேவதைக்கு பூசைபோடவும் சகலமுங்கைகூடுமென்று முன்னோர்கள் கூறுகிறார் உத்தமம்

122-வது

நூற்றுடனே யிருபத்தி ரெண்டைத்தொட்டீர்
நோக்கியதோர் வியாபாரம் பலிதமாகும்
தோற்றதொரு பொருளெல்லாம் வந்துசேரும்
துணையென்று ஒருவரையும் நம்பவேண்டாம்
நேர்த்தியதாய் உன்மனங்கள் ருசிக்கப்பேசி
நிட்டூரம் வைத்திடுவார் சிநேகரப்பா
பார்த்திடுவாய் சொன்னமொழி நம்பிநீயும்
பாலகனே இதன்படரிட்சை பாரின்மீதே

வ-ம் நீ நினைத்தகாரியம் பலிக்கும் வியாபாரம் விருத்தியாகும் கைவிட்டுப்போன பொருள் வந்துசேரும் சிநேகிதரை நம்பவேண்டாம் நல்லவராகப்பேசி மோசஞ்செய்வார்.

123-வது

துன்பமது வுன்னைவிட்டு விலகிப்போச்சு
தொட்டதொரு குறியினுட நன்மையாலே
யின்பமுறு பந்துகட்கு ஆகாச்செய்கை
யிருக்குதப்பா வுன்னிடத்தில் விட்டுநீக்கு
தென்புறவே யின்னமைந்து தினத்துக்குள்ளே
துலையிருந்து சேதிகண்டு மகிழப்போறாய்
அன்புறவே யினியுனக்கு குறைவேயில்லை
ஆதிசிவன் சாட்சியதா யறையக்கேளே

வ-ம்— இப்போது தொட்டகுறியால் மனக்கவலைதீரும் ஆனா லுன்னிடத்திலொரு கெட்டசெய்கையிருக்கிறது அதினாலுன்னு டைய பந்துக்களுக்கு விரோதமாயிருக்கிறாய் அந்த செய்கையை நீக்கி விட்டாலின்னமைந்து தினத்திற்குள் துலையிலிருந்து நல்லசேதிவரும் சந்தோஷப்படுவாய்

124-வது

அஞ்சாதே தொட்டதொரு குறியைக்கேளும்
அப்பனே யினியொன் றும் குறைவேயில்லை
வஞ்சனை செய்கையாளர் உறவேயாவார்
வகைதப்பிப் போனபொருள் வந்துசேரும்
நெஞ்சதனில் நினைத்ததொரு யெண்ணங்கூடும்
நினைக்கவே செய்தொழிலும் லாபங்காணும்
கொஞ்சநாள் கழியயிவ் வருடங்கூடும்
குருமுனியும் சாட்சியதாய் கூறினேனே

வ-ம்— நீதொட்டகுறி நூற்றியிருபத்திநாலாகையால் இனி உனக்கு குறைவில்லை பகையாயிருந்தவர் உறவாகுவார்கள் உன் கை விட்டுப்போன பொருள்வந்துசேரும் செய்தொழிலில் லாபங்கிடைக் கும் நினைத்தகாரியமிந்தவருஷமதிற் கூடும்குலவிருத்தியாகும்உத்தமம்

131-வது

தொட்டகுறி நூற்றிமுப்பத் தொன்றதாலே
தோஷமில்லை யெண்ணமது முடியுமப்பா
விட்டுதப்பா நவக்கிரகம் பூசைசெய்ய
வெகுநாளா யுன்னைத்தொட்ட பீடையெல்லாம்
பொட்டனவே பெண்ணொருத்தி சினேகமாவாள்
பொருளுடனே லாபம்வரும் கவலைவேண்டாம்
இட்டமுடனின்னாலே நம்பினோர்க்கே
யென்னாளும் குறைவில்லை யென்றார்தானே

வ-ம்— நீதொட்டகுறியால் ஜெயமாகும் பெருத்த ஆலோசனை எண்ணியிருக்கிறாய் அது ஒருபெண்ணால் முடியும் நீ நவக்கிரகபூசை செய்துவரவும் ஜெயமாகும் உத்தமம்.

132-வது

மத்திபமாம் நூற்றி முப்பத்திரண்டைத்தொட்டாய்
மனவருத்தம் தொட்டகுறி பொருளும் நஷ்டம்
சித்தமது கலக்கமாம் வியாதிசேரும்
செய்தொழிலுங் கைவிட்டு சோருமப்பா
உத்தமனே யுன்மனைவி பங்கையாளாவாள்
உலகமதில் தொடுகுறியி னுண்மைசொன்னேன்
முத்திபெற்ற முன்னோர்கள் சொன்ன நூலை
மூடரல்லோ பொய்யென்று மொழிகுவாரே

வ-ம்— நினைத்தகாரியம் ஆகாது பொருள் நஷ்டம்வரும் திரேகம் அசெளக்கியமாய் வியாதிதரும் உன் பெண்சாதி பங்கையாவாள் செய்தொழில் கைவிட்டுப்போகும் மத்திபம்.

133-வது

காணவே நூற்றிமுப்பத்திமூன்று
கண்மணியே தொட்டதினால் நன்மையுண்டு
வேணபெரியோராலே யுதவியாகும்
வேண்டியொரு யெதிரியை நீ வெல்வாயப்பா
தோணவே யுந்தன் குலதேவதைக்கு
தொழுதுமே பூசைசெய்து வந்தாயானால்
பூணவே லாபமுண்டு வீட்டுநன்மை
புண்ணியனே சொன்னமொழி நம்பிப்பாரே

வ-ம்— நீ நினைத்தகாரியம் ஜெயமாகும் ஒருபெரிய மனுஷருதவியால் உன்னெதிரியை வெல்வாய் ஆனாலுன் வீட்டுக்காரியமும் நன்மையாகும் குலதேவதைக்கு பூசைபோடவும் உத்தமம்.

134-வது

அறியவே நூற்றி முப்பத்திநாலை
அப்பனே தொட்டதொரு செய்திகேளு
தெரியவே வியாபாரம் விர்த்தியாகும்
தியங்குகின்ற திரேகத்தின் பீடைநீங்கும்
வருகுமொரு யெதிரிகளும் விலகிநிற்பார்
வையமிசை புத்திரரைப் பெற்றுவாழ்வாய்
குருமொழிபோல் சகாதேவன் சொன்னவாக்கு
குவலயத்தில் கண்டுமன மகிழுவீரே,

வ-ம்— நினைத்தகாரியம் ஜெயமாகும் வியாபார விர்த்தியாகும் உன் யெதிரிகளெல்லாம் விலகிப்போவார் உன் திரேக பீடையுமொழியும் புத்திரபாக்கியமுண்டாகும் இதுகளெல்லாம் நாளுக்குநாள் கைகூடும் உத்தமம்,

141-வது

யெண்ணிவந்த விவாகமது கூடுமப்பா
யிசையவே நீதொட்ட குறியினாலே

பண்ணவே லாபம்வரும் கவலைவேண்டாம்
பகையாளர் அண்ணன் தம்பி உறவேயாவார்
நண்ணியே பந்துஜெனம் உறவேயாவார்
நஷ்டமில்லை யெத்தொழிலும் பலிக்குமப்பா
கண்மணியே ஒருவருட சகாயம்வேண்டாம்
கருத்ததுபோல் நடத்திமனக் கவலைநீரே

வ-ம்— நீ தொட்டகுறி நூற்றிநாற்பத்தி யொன்றுகையால் நினைத்துவந்து கல்யாணகாரியம் முடியும் தனலாபங்கிடைக்கும் பகையாயிருந்த அண்ணன் தம்பிகள் உறவாவார்கள் பந்துஜனம் உதவியாகும் தைரியம்விடவேண்டாம் ஒருவர்தாட்சணிய மில்லாமல் நடத்தலாம் ஜெயமாகும் உத்தமம்.

142-வது

சீராக தொட்டகுறி செய்திகேளு
செல்வமது பெருகுமடா விவாகம்கூடும்
தோராமல் வாழ்ந்திடுவாய் துணிவாய் நீயும்
துணைகொண்ட சினேகிதனை நம்பவேண்டாம்
நேராக முன்னொருநாள் மோசம்போனாய்
நினைவதனை விட்டின்மேல் நீயும்வைத்தே
பாரோரும் அம்மனைநீ பூசைசெய்யப்
பலிக்குமடா சகலமும்நீ பயப்படாதே

வ-ம்— நீதொட்டலக்கம் நூற்றிநாற்பத்திரண்டாகையால் தனலாபங்கிடைக்கும் விவாகம்கூடும் ஆனால் நீ ஒருசினேகிதனை நம்பியிருக்கிறாய் அவன் கெட்டயெண்ணம் வைத்திருக்கிறான் அவனை நம்பவேண்டாம் அதேனென்றால் நீ முன்னொரு தடவை மோசம் போயிருக்கிறாய் வீட்டுக்கியாபகமாயிரு அம்மனை பூசைசெய்ய சகலமும் நன்மையாகும்.

143-வது

நூற்றிநாற்பத்தி மூன்றை நம்பிநீதொட்டதாலே
தோற்றிடும் பொருளுஞ்சேரும் தர்மவான்சிநேகமாவான்
சாற்றியகஷ்டந்தீரும் திரவியலாபமாகும்
ஆத்திரப்படவேவேண்டாம் அம்மனைப்பூசைசெய்யே

வ-ம்— நினைத்தகாரியம் ஜெயமாகும் நல்லதர்மமுள்ள சிநேகிதரால் உதவியுண்டு மனக்கவலைதீரும் தனலாபங் கிடைக்கும் நீ உன்னுடைய குலதேவதைக்கு பூசைபோட சகலமும் கைகூடும்.

144-வது

கண்மணியே நூற்றி நாற்பத்துநாலை
கருத்துடனே தொட்டதினால் வருத்தமில்லை
பண்ணவேபெரியோரால் உதவியுண்டு
பலமானவுத்தியோகங் கிடைக்குமப்பா
எண்ணங்கள் வெவ்வேறு யெண்ணவேண்டாம்
யெத்தொழிலுஞ் செய்தாலும் பலனேகாணும்

திண்ணமென்று மூடரல்லோ யிதனைச் சொல்வார்
தெரிந்தவர்க்கு யிந்நூலே சிரேஷ்டந் தானே.

வ-ம்— நீ நினைத்தகாரியம் ஜெயமாகும். ஒரு பெரிய மனுஷரால் உதவியாகும் பலமான உத்தியோகங் கிடைக்கும் வியாபாரம் விர்த்தியாகும் தனலாபம் கிடைக்கும் வீட்டுக்காரியம் ஜெயமாகும்.

211-வது.

சித்தத்தில் நினைத்ததொரு யெண்ணங் கூடும்
ஜெயமாகுங் குடும்பமது விர்த்தி யாகும்
புத்திரருமிகப் பெறுவாய் பொருளுஞ் சேரும்
போரரெனென்ற வெளியூரின் ஆசை நீக்கி
உத்தமனே யுன்னிடத்தில் தேவ பூசை
யுறுதிகொண்ட யெண்ணத்தால் போகொணாது
பத்தியாய் நாற்பத்தி ஐந்து நாளும்
பாலகனே ஒழியவகை கூடும் பாரே

வ-ம்— இருநூற்றுப்பதினொன்றைத் தொட்டதால் நினைத்த காரியங் கைகூடும் குடும்பவிர்த்தியாகும் புத்திரலாபமுண்டு ஆனால் நீ வெளியூர்போக எண்ணங்கொண்டிருக்கிறாய் அது கூடாது ஏனென்றால் உன்னிடத்தில் தேவபூசையிருக்கிறது அதனால் இன்னம் நாற்பத்தைந்துநாள் கழிந்தால் கைகூடும் உத்தமம்.

212-வது.

மன்னவனே நீதொட்ட லக்கத்தாலே
மனவருத்தம் பொருள்சேரும் குடும்பவிர்த்தி
சொன்னபடி பொருள்சேரும் குடும்ப விர்த்தி
சுத்தமுள்ள வீட்டுக் காரியமும் நன்மை
உன்னுடைய ஜென்மத்தை விட்டு ராகு
ஒழிந்திடுவான் பின்னுமெட்டு தினத்திற் குள்ளே
தன்மையுடன் தொடுகுறியி னுண்மை பாரு
தப்பினால் சாஸ்திரத்தைச் சுட்டுப் போடே.

வ-ம்— தொட்டலக்கம் இருநூற்றிப் பன்னிரண்டாகையால் மனக்கவலைதீரும் தனலாபங் கிடைக்கும் குடும்ப விர்த்தியாகும் வீட்டுக் காரியஞ் ஜெயமாகும் உன்னுடைய ஜென்மத்தில் இராகு இருக்கிறான் இன்னும் எட்டு தினத்தில் ஒழிகிறான்.

213-வது.

இருநூற்றிப் பதின்மூன்றைத் தொட்டதாலே
யெத்தொழிலைச் செய்தாலும் அதிகலாபம்
உருவற்றுப் போனபொருள் வந்துசேரும்
உத்தமனே வெளியூரில் கிடைக்கும்லாபம்

தெரிவித்தேன் உனக்கெதிரி யொருவனுண்டு
திடமாக அவனையும்நீ நம்பவேண்டாம்
அறிவித்தேன் தைரியத்தை நீவிடவேண்டாம்
அப்பனே பொருளொன்று நஷ்டமாமே.

வ-ம்- தொட்டகுறியால் லாபங்கிடைக்கும் கைவிட்டுப்போன பொருள்வரும் வெளியூரில் லாபங்கிடைக்கும் அதனால் உனக்கு எதிரி ஒருவனுண்டு அவனை நம்பவேண்டாம் நீயுந் தைரியம் விடவே வேண்டாம் ஆனாலுனக்கு முன்னதாய் ஒருபொருள் நஷ்டமாகவரும் அதற்கும் பயப்படவேண்டாம் பின்னால் லாபங்கிடைக்கும் உத்தமம்

214-வது.

இருநூற்றிப் பதினாலைத் தொட்டதாலே
எவ்வளவோ ஒருவருஷம் வருத்தப்பட்டாய்
குறைவன்றிக் கேட்டநாள் துடங்கியப்பா
கொற்றவனே ஏழுநாள் கழிந்ததானால்
பரிவுடன் ரெண்டாண்டு குறைவேயில்லை
பட்டதொரு துன்பமெல்லாம் விலகிப்போச்சு
மருமமெல்லாம் வழியாகச் சொன்னேனப்பா
மைந்தனே விட்டதொழில் மகிழ்ந்துசெய்யே.

வ-ம்- நீதொட்டது என்னவென்றால் நீரொம்பவும் ஒருவருஷம் வருத்தப்பட்டாய் வருத்தம் நீங்கிவிட்டது இப்போது நீகேட்டநாள் தொடங்கி இன்னம் ஏழுநாள் கழிந்தால் இரண்டு வருஷம் குறைவில்லாமலிருப்பாய் நீ முன்செய்த தொழிலைவிட்டு இருக்கிறாய் அதைச் செய்யவும் சகலமும் நன்மையாகும் உத்தமம்

221-வது.

மண்டலத்தின் தொடுகுறியின் மருமங்கேளீர்
மருமமாய் நினைத்தபொருள் முடியாதப்பா
விண்டதப்பா எத்தொழிலும் பலியாதென்று
வீணைகப் பலர்சொல்லைக் கேட்கவேண்டாம்
சண்டையது சினேகிதத்தில் நேருமப்பா
சனியனுட கூத்தாலே வந்தனுக்கு
கண்டதொரு யிம்மாதங் கழிந்துதானால்
கண்மணியே கவலையெல்லாங் கடந்துபோமே.

வ-ம்- நீ தொட்டகுறி இருநூற்றி யிருபத்தொன்றாகையால் நினைத்தகாரியம் கைகூடாது எந்தவேலை செய்தாலும் பலியாது ஒருவர் சொல்லைக் கேட்கவேண்டாம். சினேகித காரியத்தில் சண்டையாகும் ஆனால் நீ கேட்டநாள் துடங்கி முப்பதுநாள்போனால் பலிக்கும் மத்திபம்.

222-வது

தொட்டதோர் குறியினாலே துன்பமும்மிகவுண்டாகும்
மட்டது யெடுத்தவேலை மத்திபம்பாபம்நேரும்
கெட்டதோர் யெண்ணமுந்தான் கருத்தினில்கூடிவாழும்
விட்டிட அந்தயெண்ணம் வெகுசுகமென்றார்முன்னோர்

வ-ம்= நீ இருநூற்றி இருபத்திரெண்டைத் தொட்டதால் எந்தவேலைசெய்தாலுங்கைகூடாது அபாயம்வரும் உன்மதில்கெட்ட எண்ணமிருக்கிறது எண்ணத்தை விட்டுவிடு சுகம்.

223-வது

தொட்டதோர் குறியினாலே துலைந்ததுதுன்பமெல்லாம்
விட்டது கிரகமெல்லாம் வந்ததுநல்லகாலம்
சட்டெனப் பதறவேண்டாம் சகலமுங்கைதான்கூடும்
பொட்டென வுரைத்தவாக்கைப் புத்தியில்மதித்துப்பாரே

வ-ம்= நீ தொட்டகுறி இருநூற்றி இருபத்திமூன்றாகையால் நினைத்தகாரியஞ் ஜெயமாகும் உன்னுடைய கிரகமெல்லாம் நன்றாயிருக்கிறது தனலாபங்கிடைக்கும் குறைவில்லை உத்தமம்.

224-வது

எண்ணியே தொட்டலக்கம் எடுத்ததோர் வேலைசாயும்
நண்ணியே ஒருவருக்கு நல்லுபகாரஞ்செய்ய
பண்ணின யெண்ணந்தன்னை பகர்ந்துநீயறிந்துசொல்ல
திண்ணமும் வாராதப்பா ஜெகமதில் பலிக்கும்பாரே

வ-ம்= இருநூற்றியிருபத்திநாலைத் தொட்டதால் அட்டியில்லாமல் எடுத்தவேலைமுடியும் ஆனால் நீ ஒருவருக்கு உபகாரஞ்செய்ய எத்தனித்திருக்கிறாய் அதை ஆலோசித்து செய்யவும் நன்மையாகும்.

231-வது

பலித்தது தொட்டலக்கம் பகையது துலைந்துபோச்சு
கெலித்தது நினைத்தவேலை கொஞ்சநாள் கழியக்கூடும்
சலித்திட வேண்டாமையா சாஸ்திரமொழியைப்பாரு
நிலைத்திதை நம்பினோர்க்கு நாளுமென் சுகமென்றாரே.

வ-ம்= இருநூற்றிமுப்பத்தொன்றைத் தொட்டதால் நினைத்த காரியஞ்ஜெயமாகும் நீ ஒரு காரியத்தைப்பற்றி நினைத்திருக்கிறாய் அது இன்னங்கொஞ்சநாளில்கைகூடும் பயப்படவேண்டாம்உத்தமம்

232-வது

இக்கட்டுந் துலைந்துபோச்சு எடுத்ததோர் பேரஞ்சாயும்
திக்கெட்டுக் கீர்த்திபெற்ற தீரமிகவுண்டாகும்
பக்குவமான காட்டில் பலித்ததுன் கிரகமெல்லாம்
சிக்கென வாழ்ந்தையானால் செல்வமும் பெருகுமென்றார்

வ-ம்— நீதொட்டது இருநூற்றிமுப்பத்திரண்டாகையால் மன வருத்தம் நீங்கிவிட்டது ஜெயகால முதலியாச்சு கிரகங்கள் நல்ல வீட்டிலிருக்கிறது தனலாபங்கிடைக்கும் உபாயமாய் வரவும்.

233-வது

அறிந்திடுவாய் நீதொட்ட குறியினுண்மை
அலட்டுதப்பா வுன்மனதில் விசனமொன்று
தெரிந்திடுவாய் வெளியூரின் விசனமொன்று
தக்கசினேகிதன் பிரிந்த விசனமொன்று
துலைத்திடுவா யின்னொருவன் சினேகமாவான்
துஷ்டனப்பா வுனக்கெதிரி அவனேயாகும்
பிரித்திடுவாய் அவனையும்நீ விட்டுநீக்கு
பேசிய துன்பமெல்லாம் விலகிப்போமே

வ-ம்— நீதொட்டகுறி இருநூற்றிமுப்பத்து மூன்றாகையால் உன்மனதில் விசனமொன்று வெளியூர் விசனமொன்று நல்ல சினேகிதனைப்பிரிந்த விசனமொன்றுயிருக்கிறது ஆனல் இப்போது ஒரு சினேகிதனைக்கூடியிருக்கிறாய் அவன் உனக்கு வைரியாயிருக்கிறான் அந்த சினேகிதத்தைவிட்டு நீங்கவும் பலிக்கும்.

234-வது

ஜெயமது பலித்துப்போச்சு சித்தமும்கலங்கவேண்டாம்
நயமுடன் னிரண்டுபக்கம் லாபமுங்கிடைக்குமப்பா
தயவது வுள்ளோன்நல்ல தர்மவான் சினேகமாவான்
பயமது யில்லைசத்துரு பாவியுந்துலைவானென்றார்

வ-ம்— இருநூற்றிமுப்பத்தினாலை தொட்டதால் உனக்கு இரண்டுபக்கமும் லாபங்கிடைக்கும் நல்ல சினேகிதர்கூடுவார் இதினால் உன் மனக்கவலைதீரும் உன்சத்துரு நாசமாவான் ஜெயமாகும்

241-வது

கேளப்பா தொட்டதொரு குறியைச்சொல்வேன்
கண்மணியே விவாகத்தின் விசனமொன்று
கேளப்பா வெளியூரின் விசனமொன்று
கருத்துள்ள சினேகிதன்மேல் விசனமொன்று
கேளப்பா வுன்னுடைய குடும்பந்தானே
கெடுதிசெய்ய வுனக்கெதிரி ஒருவனுண்டு
கேளப்பா அவனைநீ விலக்கிவிட்டால்
கவலையெல்லா மொழிந்து சுகப்படுவாய்தானே.

வ-ம்— நீதொட்டகுறி இருநூற்றிநாற்பத்தி ஒன்றாகையால் உனக்கு விவாகத்தின் விசனமொன்று இன்னம் உன் குடும்பத்தில் ஒருவன் இருக்கிறான் அவன் கெட்டயெண்ணம் வைத்திருக்கிறான் அவனை நீக்கினால் சுகப்படுவாய் நம்பு.

242-வது

குறைவது யில்லையென்று கூறியமொழியைநம்பு
பெருமையாய் வீட்டிற்சொன்ன பேச்சதுமுடியுமப்பா
மருமமுங் கவலைதீரும் மாற்றலர்தன்னைக்கொண்டு
வருவன யோசித்தாலுந் தாட்டியாய் முடியுந்தானே

வ-ம்— நீ தொட்ட லக்கம் இருநூற்றிநாற்பத்திரண்டாகையால் மனக்கவலைதீரும் வீட்டில் யோசித்தகாரியம் ஜெயமாகும் இல்லாவிட்டால் இன்னம் யாரையாவது கொண்டு யோசித்தாலும் முடியும் எதிரி நாசமாவான்.

243-வது

இருநூற்றி நாற்பத்தி மூன்றைதொட்டாய்
எத்தொழிலைச்செய்தாலும் பலிக்குமப்பா
தருணத்தில்தனலாபந் தேகாரோக்கியம்
தம்பியடாவிட்ட காரியமுமாகும்
அறியதவவுத்தியோகம் புத்தரபாக்கியம்
அப்பனேதடையின்றி யாகுமப்பா
தெரியவேதைரியத்தை விடவேவேண்டாம்
தடையின்றிநினைத்ததொழில் செய்துபாரே.

வ-ம். நீதொட்ட சாத்திரத்தில் புத்திரபாக்கியம் உண்டாகும் தேகசவுக்கியமாகும் உத்தியோகங்கிடைக்கும் தனலாபங்கிடைக்கும் எந்தவேலை செய்தாலும் ஜெயமாகும் விவரித்துசெய்யலாம் தைரியம் விடவேண்டாம் நம்பு உத்தமம்.

244-வது.

சித்தமதுகலங்காதே அப்பாகேளு
செல்வமதுபெருகுமடா தொட்டலக்கம்
உத்தமனேகிரகங்கள் பலனைக்கூட்டும்
உறவுகொண்டசினேகிதனை நம்பவேண்டாம்
பத்தியவன்உனைக்கெடுக்க வெண்ணங்கொள்வான்
பாலகனேஅவனுறவை நீக்கிவிட்டால்
எத்தொழிலைச்செய்தாலும் பலிக்குமென்று
யியம்பியசகாதேவர் நூலைநம்பே.

வ-ம். நீதொட்டலக்கம் இருநூற்றி நாற்பத்தினலாகையால் உன் பீடை துலைந்துபோச்சு கிரகங்கள் நல்லதாயிருக்கின்றது நீ ஒருவனை நம்பியிருக்கிறாய் அவன் மனதில் கெட்டவெண்ணம் வைத்திருக்கிறான் அவனை நம்பவேண்டாம் உன் மனம்போலே செய்தால் பலிக்குங் குறைவில்லை.

311-வது

பாலனே தொட்டலக்கம் பணத்தினில் விசனமொன்று
சாலவேயுனக்குமெத்த சஞ்சலம்வெளியூராலே
சீலமாம்குலசாமிக்குச் சிறப்புடன்பூசைசெய்ய
மேலதுபெறுவாயப்பா மர்மமும்வெளியாய்சொன்னேன்.

வ - ம். நீதொட்ட லக்கம் முன்னூற்றிப்பதினொன்றாகையால் உனக்கு பணத்தினுட விசனமொன்றுயிருக்கிறது வெளியூர் விசனமொன்றிருக்கிறது அதுகளெல்லாந்தலைவதற்கு உன்னுடைய குல தேவதைக்கு பூசைபோடு கைகூடும்.

312 - வது.

மனமதுகவலைவேண்டாம் மருவியபொருளுஞ்சேருங்
கனமுடன்குடும்பவிர்த்தி களிப்புறபுத்திரருண்டு
வினைமுதல்மெய்யில்வாழும் வியாதியும்பரந்துபோகும்
இன்பமாய்த் தொட்டவேளை யேகமாய்பலிக்கும்பாரே.

வ - ம். முந்நூற்றிப்பனிரெண்டைத் தொட்டதால் மனக்கவலை தீரும் தனலாபங்கிடைக்கும் குடும்ப விர்த்தியாகும் புத்திரலாபமுண்டு திரேகத்தின் வியாதிதீரும் எந்தத்தொழிலைச் செய்தாலும் பலிக்கும் தைரியம் விடவேண்டாம் உத்தமம்.

313 - வது.

பணமென்றஆசையது மெத்தவுண்டு
பலிக்குமேநினைத்தபடி பயப்படாதே
குணமில்லாவுனக்கெதிரி யனேகருண்டு
கோடிபேர்யெதிர்த்தாலு முனக்கேலாபம்
மனமறியஉந்தன்குல தேவதைக்கு
மாதமொருபூசையது புரிந்தாயானல்
இனமாகசகலமுந்தான் மனம்போல்கூடும்
யேதொன்றுமஞ்சாதே யீசன்சாட்சி.

வ - ம். நீ முந்நூற்றிப் பதின்மூன்றைத் தொட்டதால் உனக்குப் பணத்தினுட ஆசையிருக்கிறது அது தடையில்லாமல் பலிக்கும் ஆனல் உனக்கு லாபங்கிடைக்கும் நீ உன் குலதேவதைக்கு மாதத்திற்கொரு பூசைபோடு கைகூடும் உத்தமம்.

314 - வது.

உன்னுடகிரகநன்மை உடனேமுன்விவாகங்கூடும்
தன்னிகராகவாழ்வாய் தர்மமுமனதிலெண்ணு
விண்ணவருந்தவியுண்டு வழுத்திடுசோமவாரம்
எண்ணியேவிரதங்காக்க எத்தொழில்பலிக்குமென்றூர்.

வ - ம். நீ முன்னூற்றிப்பதினாலைத் தொட்டதால் நினைத்த காரியம் முடியும் கலியாணங்கூடும் சம்பத்தாய் வாழ்வாய் தர்மம் பண்ணு நீ திங்கட்கிழமைதோறும் விரதமிரு ஈஸ்பரன் துணையிருப்பார்.

321 - வது.

வருத்தமுமிகவுண்டாகும் வாடியேமெய்யுஞ்சோருங்
கருத்துடன் வெதைச்செய்தாலும் கைப்பொருள்விரையமாகும்
இருபத்தியொன்றுமாதம் போகப்பின்சுகமுண்டாகும்
தெரிவித்தமொழியைநம்பி தைரியங்கொள்ளுவாய்நீயே.

வ - ம். முன்னூற்றிருபத்தி யொன்றைத் தொட்டதால் மனவருத்தமாயிருக்கிறாய் நினைத்தகாரியம் மத்திபம் துணிவால் ஒரு தொழில் செய்தாலும் நஷ்டம் எந்தவேலைசெய்தாலும் விசாரித்துசெய் உனக்குயிருபத்தொருமாதம் போனபிறகு சுகமாகும் மத்திபம்.

322 - வது.

உள்ளத்தின்கவலைதீரும் உன்னுடன்பிறந்தோராலே
தெள்ளியலாபஞ்சேரும் திறமுடன்வருஷந்தன்னில்
கள்ளமுமில்லைசொன்னேன் கையதுவிட்டவேலை
வள்ளலின்கிருபையாலே வருகுமென்றுரைத்திட்டாரே.

வ - ம். நீ தொட்டலக்கம் முந்நூற்றியிருபத்திரண்டானகையால் நினைத்த காரியம் அண்ணன் தம்பியால்முடியும் இந்த வருஷத்தில் காரியஞ் சித்தியாகும் போனவேலைவரும் நீ எத்தனஞ்செய் உத்தமம்.

323 - வது.

சந்தேகமில்லைசொன்னேன் சார்ந்திடும்வெளியூர்லாபம்
வந்திடுமெதிரிநாசம் வருத்தமுங்கவலைதீரும்
சிந்தையுங்களிக்கநீயுஞ் சொல்லடையாளங்கேளு
அந்தமாயிடதுகண்மேல் ஆனதோர்மச்சம்பாரே.

வ - ம். நீ முந்நூற்றியிருபத்தி மூன்றைத் தொட்டதால் எதிராளியை வெல்வாய் மனக்கவலைதீரும் வெளியூரிலிருந்து லாபங்கிடைக்கும் குலதேவதைக்குப் பூசைபோடவும் இதற்கடையாளம் உன்னுடைய இடதுகண்மேல் மச்சமிருக்கிறது.

324 - வது.

பகைவனுந் தொலைந்துவிட்டான் பலித்திடும் லாபம்மேனாய்
வகையுடன் செலிப்பாய்சண்டை வந்ததோ ரெண்ணஞ்சாயும்
தகைமையாய்த் தர்மம்பண்ணு தனித்திட பகையும்வேண்டாம்
யுகமதைக் கடந்தமுன்னோர் உரைத்தசொல் நம்பிப்பாரே.

வ-ம்– நீ முந்நூற்றிருபத்தினாலைத் தொட்டதால் உன் பகையாளி தலைந்துவிட்டான் நினைத்தகாரியம் முடியும் சண்டை செலிப்பாய் தர்மபண்ணு ஒருவரையும் பகைக்கவேண்டாம் முன்னோரெழுதின நூலை நம்பு.

331-வது.

நாடியே தொட்டலக்கம் நம்பினயெண் ணஞ்சாயும்
கூடியே லாபங்காணும் குடும்பமும் விர்த்தியாகும்
தேடியேமனை யாள்செய்யுந் தர்மமு முனக்கேலாபம்
வாடிடவேண்டா முன்னோர் வயித்தியநூலை நம்பே.

வ-ம்– நீ தொட்டலக்கம் முன்னூற்றி முப்பத்தொன்றானதையால் நினைத்தகாரியஞ் ஜெயமாகும் லாபங் கிடைக்கும் குடும்ப விர்த்தியாகும் நீ தர்மவானாயிருப்பாய் தைரியம் விடவேண்டாம் உன் பெண்சாதி செய்கிற தர்மமுனக்கு சித்தியாகும் உத்தமம்.

332-வது.

எண்ணமு முடியாதின்ன மெத்தொழில் பலித்திடாது
நண்ணிய யிரண்டுஆண்டாய் நவிலொணா நஷ்டம்பட்டாய்
உன்னுட னேசத்தானும் வுனக்கெதிர் வைரியானான்
மன்னனே வுண்மைசொன்னேன் மனமது கலங்கிடாதே.

வ-ம்– நீ முன்னூற்றி முப்பத்திரண்டைத் தொட்டதால் நினைத்த காரியமாகாது எந்தவேலை செய்தாலும் நஷ்டம் உன் சினேகிதனே உனக்கு வைரியாயிருக்கிறான் தைரியம் விடாதே மத்திபம் இரண்டு வருஷமாய் ரொம்பவுங் கஷ்டப்படுவாய்

333-வது.

நினைத்ததோர் வேலைசாயும் நம்பிநீ தொட்டலக்கம்
கனத்ததோர் சினேகங்கூடும் கடவுளின் கிருபையாலே
மனத்திடங் கொள்ளநீதான் மைந்தனே குலசாமிக்கு
யினத்துடன் பூசைசெய்ய யேந்துவாய் புத்திரலாபம்.

வ-ம்– தொட்டகுறியால் லாபங்கிடைக்கும் நினைத்த காரியம் முடியும் நல்ல சினேகிதங் கூடும் புத்திர பாக்கியமுண்டு குலதேவதைக்குப் பூசைபோடவும் உத்தமம்.

334-வது.

புலபலவெண் ணம்வேண்டாம் பாலாநீ தொட்டலக்கம்
கலகலவெனவே லாபங் கைதனில் வந்துகூடும்
சிலபெரி யோர்களாலே சினேகிதம் வந்துகூடும்
நலமதுமன தில்கொண்ட நாட்டமும் பலிக்கும்பாரே.

வ-ம்— நீ முன்னூற்றி முப்பத்தினுலைத் தொட்டதால் மனதில் நினைத்தகாரியம் முடியும் கைவிட்டுப்போன பொருள் வரும் தனலாபங்கிடைக்கும் நல்ல சினேகிதரால் உதவியாகும் பலயோசனை வேண்டாம்.

341-வது.

உன்னுட மனதில்மெத்த உருகுதுவிச னமொன்று
பின்னியே பித்தவாய்வு பிரட்டுது திரேகமெல்லாம்
சொன்னசொல் தவிர்ந்திடாதே சிவனைநீ தியானஞ்செய்தால்
நண்ணியே புத்திரலாபம் நலந்தரும் பின்னுலென்ருர்

வ-ம்— முன்னூற்றி நாற்பத்தியொன்றைத் தொட்டதால் உன் மனதில் விசனமொன் றிருக்கிறது இன்னும் உன்னுடம்பில் பித்தவாய்வு தங்கியிருக்கிறது நீ சிவனைத் தியானஞ்செய் சகலமும் துலையும் புத்திரலாபமுண்டாகும் இதுகள் பின்னுல் சுகம் உத்தமம் பயப்படவேண்டாம்.

342-வது.

நினைத்ததோர் எண்ணஞ்சாயும் நம்பிடுமேற்கு திக்கில்
தனத்துடன் லாபங்காணுந் தளர்ந்தமுன் கஷ்டந்தீரும்
மனத்திடங்கொள்வாய்நீயும் மருமமும்வெளியாய்ச்சொன்னேன்
இனமுட னிரண்டுமாதம் யேகபின் சுகமுண்டாமே.

வ-ம்— முன்னூற்றி நாற்பத்திரெண்டைத் தொட்டதால் நினைத்த காரியஞ் சித்தியாகும் மேற்குத்திசையில்லாபமுண்டு நீபடுங் கஷ்டந்தீரும் இன்னம் இரண்டுமாதத்தில் சுகமாகும் உத்தமம் பயப்படவேண்டாம்.

343-வது.

கோபஞ்சண் டாளங்கொண்டு கூடியபொரு ளைத்தோற்றுய்
தாபமும் வேண்டாமப்பா தானது வந்துகூடும்
சாபமாய் ரொம்பநாளாய் சஞ்சலப் பட்டுவந்தாய்
லாபமும் பெறுவாய்ஐந்து மாதமுங் கழிந்துபாரே.

வ-ம்— முன்னூற்றி நாற்பத்திமூன்றைத் தொட்டதால் மனக் கோபத்தினுல் கைவிட்டுப் போனபொருள் வரும் நீரொம்பநாள் துன்பப்பட்டுக்கொண்டுவந்தாய் இன்னம் ஐந்துமாதம்போனுல் சுகப்படுவாய் அதுபரியந்தம் நீ நினைத்தவேலையைச் செய்யவும் ஜெயமாகும் பயப்படவேண்டாம்.

344-வது.

எண்ணமும் பலிக்குமப்பா எத்தொழில் லாபங்காணும்
திண்ணமாய் விட்டநேசந் திரும்பியும் வந்துகூடும்

வண்ணமாய் ஸ்திரீயினாலே வாழ்வது மிகவுண்டாகும்
உண்மையா யிதனைநம்பி ஒருவர்மேற் பகைகொள்ளாதே

வ-ம்— நீ முன்னூற்றி நாற்பத்தினாலைத் தொட்டதாலே உன் பீடை தொலைந்துவிட்டது எந்தவேலை செய்தாலும் லாபங்கிடைக்கும் ஒரு சினேகிதனைப் பிரிந்திருக்கிறாய் அவன் மறுபடியும் சினேகமாவான் இன்னம் ஒரு ஸ்திரீயினால் சவுக்கியமுண்டாகும் உன் பகையாளி நாசமாவான் ஆனால் நீ ஒருவரையும் நிஷ்டூரஞ் செய்துகொள்ளாதே உத்தமம்.

411-வது.

கஷ்டமும் மிகவேதோணுங் காண்பது நிராசையாகும்
துஷ்டரின் சினேகத்தாலே தோஷமாய்ப் பகையுமுண்டாகும்
நஷ்டமா மிவைகளெல்லாம் நாடாமல் விலகியோடும்
இஷ்டமாங் குலசாமிக்கு யியல்புடன் பூசைசெய்வாய்

வ-ம்— நானூற்றிப் பதினொன்றைத் தொட்டதால் நினைத்த காரியங் கைகூடாது ஆசை நிராசையாகும் ஒரு சினேகிதனால் அபாயம் வரும் அவனை நம்பவேண்டாம் நீ உன் குலதேவதைக்குப் பூசை செய்ய நாளுக்குநாள் கைகூடும்.

412-வது.

கன்னியின் ஆசையாலே கவலையும் படுகுறாய்நீ
இன்னமுஞ்சில நாள்போனால் இஷ்டத்தின் படியேகூடும்
தன்னிக ராகவேதான் தரித்திடும் புத்திரலாபம்
உன்னுடகுல சாமிக்கு யுகந்துநீ பூசைசெய்யே.

வ-ம்— நீ தொட்டலக்கம் நானூற்றிப் பனிரெண்டாகையால் நினைத்தகாரியம் கைகூடும் ஒரு ஸ்திரீ சம்பந்தத்தைப்பற்றி விசனப்படுகிறாய் அது இன்னம் கொஞ்ச தினத்திற்குள் கைகூடும் புத்திரலாபமாகும் குலதேவதைக்குப் பூசை செய்யவும்.

413-வது.

நித்தமும் பணத்தினாசை நீடியுன்மன தில்வாட்டும்
உத்தமஸ்திரீ யினாலே உதவியாம் பொருளுஞ்சேரும்
பத்திய கிரகநன்மை பலத்ததோர் சினேகங் கூடும்
சித்தியாம் ஜாதகத்தில் சொல்மொழி தப்பிப்போச்சே.

வ-ம்— நீ தொட்ட லக்கத்தின் விபரங்கேள் உனக்குப் பணத்தினுடைய விசனமொன்றிருக்கிறது ஒரு ஸ்திரீயால் பொருள் உதவியாகி அந்த விசனந்தீரும் ஒரு பெரிய மனுஷரால் உதவியாகும் வெளியூரில் வேலைகிடைக்கும் ஆனால் உன் ஜாதகம் ஒன்று தப்பியிருக்கிறது உத்தமம்

414-வது

பட்டவுன் துன்பந்தன்னை பகர்ந்திட முடியாதப்பா
தொட்டதோர் கிரகம்போச்சு துணையது யினிமேலாச்சு
இட்டமாய் மனதில்கொண்ட யெண்ணமும் ஒருமாதத்தில்
கெட்டியாய்ப் பலிக்குமென்றே காண்டீபர் தம்பிசொன்னார்

வ-ம்— நீரொம்பவும் வருத்தப்பட்டாய் அந்த வருத்தம் நீங்கி விட்டது ஆனால் உன்மனதில் ஒரு எண்ணம் வைத்திருக்கிறாய், அது இன்னம் ஒருமாதத்தில் கைகூடும் குலதேவதைக்குப் பூசை செய்ய வும் இந்த நூலில் பஞ்சவர்களில் ஒருவராகிய சகாதேவர்சொன்னது உத்தமம்.

421-வது

பொருளது கைவிட்டேகி புலம்பிமேவாடுகின்றாய்
அருளுடன் வந்துசேரும் அயலூரில் பலனைக்காட்டும்
மருமொழி கவலைவேண்டாம் மைந்தனைபெற்றுவாழ்வாய்
குருமொழி யாகநம்பி குறிப்பைநீ யறிந்துகொள்ளே

வ-ம்— நீதொட்டது என்னவென்றால் கைவிட்டுப்போன பொருளைப்பற்றி விசனப்படுகிறாய் அது கைகூடும் வெளியூரில் உதவி யாகும் புத்திரலாபமாகும் விசனப்படவேண்டாம்

422-வது

சென்றதோர் வருடமூன்றுஞ் சிறுமையால் மெய்யதாகும்
இன்றுடன் பீடையெல்லாம் ஒழிந்திடும் பயப்படாதே
நன்றென யெடுத்தவேலை நம்பிசெய் கவலைவேண்டாம்
வென்றுநீ வாழ்வாயப்பா வேணதோர் புத்திரரோடே

வ-ம்— நீ மூன்றுவருஷமாய் மிகவும் வருத்தப்பட்டாய் அந்த வருத்தம் நீங்கிவிட்டது எந்தவேலை செய்தாலும் பலிக்கும் விசாரித்துசெய் பயப்படாதே புத்திரலாபமுண்டு குலதேவதைக்கு பூஜை செய்யவும்

423-வது

குறைவது யில்லைசொன்னேன் கொண்டதோர் எண்ணஞ்சாயும்
பெருகுவாய் அதிகலாபம பின்னொரு பயமும்வேண்டாம்
திரமுடன் யெத்தொழிலுந் தீரமாய்செய்வாயானால்
அரியவே பலிக்குஞ்சொன்னேன் ஆயன்தன் அருளினாலே

வ-ம்— நீநினைத்தகாரியம்முடியும் எந்தத்தொழில் செய்தாலும் அதிகலாபங்காணும் விசாரித்துசெய் பயப்படவேண்டாம் உத்தமம்.

424-வது

நம்மிட யெண்ணமெல்லாம் நஷ்டத்தில் அழிந்துபோச்சு
வெம்பியே வாடுகின்றாய் வீட்டிலுஞ் சுகமில்லாமல்
தெம்புடன் வாழப்போறாய் தைரியம்விடவேவேண்டாம்
உம்பரின் சாட்சியாக உரைத்தசொல் நம்பிப்பாரே.

வ-ம்— நீதொட்டலக்கமென்னவென்றால் நீரொம்பவும் வருத்தப்படுகிறாய் நினைத்தவேலையெல்லாம் நஷ்டமாய்விட்டதுவீட்டிலுஞ் சுகமில்லை ஆனால் இனி சுகப்படுவாய் பயப்படவேண்டாம்

431-வது

பாலனே பயப்படாதே பலித்திடும் நினைத்தவேலை
மேலென அண்ணன்தம்பி மகிழுடன் கூடுவார்கள்
காலமும் நல்லதாச்சு கிரகமும் விட்டுப்போச்சு
சீலமாய் வாழ்வாயப்பா சந்தேகமில்லைதானே

வ-ம்— நினைத்தகாரியஞ் சித்தியாகும் மனக்கவலைதீரும் அண்ணன்தம்பி வந்து கூடுவார்கள் உன்கிரகங்கள் நல்லதாயிருக்கின்றது சந்தேகப்படவேண்டாம் உத்தமம்.

432-வது

மனதினில் நினைத்தவேலை மகிழுடன் வந்துகூடும்
கனமுமே வெளியூர்போக கருத்தினில் யெண்ணங்கொண்டாய்
துணையென நம்பவேண்டாம் துணிந்துசெய் மனதில்போல
குணமுடன் மனம்போலண்ணன் கூடுவதிலையென்றாரே

வ-ம்—மனதில் நினைத்தவேலை முடியும் நீ வெளியூர்போக யோசித்திருக்கிறாய் தடையில்லாமல் போகலாம் ஒருவரையும் நம்ப வேண்டாம் நீ அண்ணன்தம்பியுடன் பகையாயிருக்கிறாய் உத்தமம்.

433-வது

சங்கையு மில்லைசொன்னேன் சகலமுங்கைதான்கூடும்
மங்கள மாகவாழ்வாய் மற்றொருநேசராலே
பொங்கமா வீட்டுவேலை புகழ்ந்துமே மிகவுண்டாகும்
தங்கென நாளுக்குநாள் தழைத்திடும் புத்திரலாபம்

வ-ம்— வியாபாரம் விர்த்தியாகும் தனலாபங் கிடைக்கும் நல்ல சினேகிதரால் வீட்டுக்காரியம் நன்மையாகும் புத்திரலாபங் கிடைக்கும் பயப்படாதே நாளுக்குநாள் சுகமாகும்

434-வது

கையது கூடும்வேளை கஷ்டமும் விலகிப்போச்சு
துய்யனே உனதுவீட்டுத் துயரமும் இனிமேலில்லை
ஐவரின் இளையதம்பி அருள்சகாதேவர்வாக்கை
மெய்யென நம்பிமாயன் மேன்மையா யுரைத்தவாக்கை

வ-ம்— நீ நினைத்தகாரியம்முடியும் வீட்டுக்கஷ்டமுந்தீரும் கடவுளைப் பூசைசெய்யவும்.

441-வது

கிரகமும் பொல்லாதப்பா கவலையுமிக்வுண்டாகும்
பிரியமாய்த் தேடினவுன் பொருளது விலகிப்போச்சு

வருமென யெண்ணவேண்டாம் வழுத்திடுமாதமேழில்
உரையது தவறினுக்கால் ஓங்கியீராண்டிலாமே

வ-ம்— நினைத்தகாரியம் மத்திபம் உன் கிரகம் கெட்டதாயிருக்கிறது உன்கைவிட்டு ஒருபொருள் போனது அந்தப்பொருள்வந்தால் ஏழுமாதத்திலாவது இரண்டுவருஷத்திலாவது வரவேணுந் தைரியம் விடாதே

412-வது

நலியெனும் பிணிதான்மெய்யில் நாளுமே யுன்னை வாட்டும்
சலியாமல்நீசெய் தர்மம் சகலமும் நன்மையாகும்
குலமெனுந் தேவதைக்கு கூட்டியே கிரகபூசை
நலமுடன் செய்வாயாகில் நாளுமே சுகமென்றாரே.

வ-ம்— நீ எப்போதும் உடம்பு நலிவாயிருக்கிறாய் இருந்த போதிலும் உன்னுடைய தர்மம் காப்பாற்றுகிறது இன்னம் குலதேவதைக்கும் நவக்கிரகத்திற்கும் பூசை செய்வாயாகில் சகலமும் நன்மையாகும் உத்தமம்.

443-வது.

மூன்னு தாய்ப் பலிக்கும்லாபம் முதல்வன்றன் கிருபையாலே
பின்னொருபொருளும் நஷ்டம் பிரிந்திடு மஞ்சிடாதே
யின்னொரு மாதமட்டும் யிருக்குது கெட்டகாலம்
பின்னிட சுகமேயென்று பேசிய மொழியைநம்பே.

வ-ம்— நீ நினைத்தகாரியம் பலிக்கும் பலித்தபோதிலும் ஒருபொருள் நஷ்டமாகும் கிரகங்கள் கெட்டதாயிருக்கிறது இன்னம்ஒருமாதங்கழித்தால் சுகப்படும் தைரியம் விடவேண்டாம்.

444-வது.

ஜெயமுடனே யெத்தொழிலும் பலிக்குமப்பா
சிந்தையிலே பயமென்ன கவலைநீக்கு
நயம்பெறுவ ய் பந்துவுடன் கூடிவாழு
நாட்டமாய் முன்செய்த தொழிலைநம்பு
தயவுடனே ஆராய்ந்து கிருபையாலே
தான்வாழ்வா யென்றுசகா தேவர்சொன்னார்
ஜெயமாக யிந்நூலை நம்பினோர்கள்
சிரஞ்சீவி யாயுலகில் வாழ்வார்தானே.

வ-ம்— நீநானூற்றி நாற்பத்தினாலைத் தொட்டதால்நினைத்தகாரியம் சித்தியாம் உன்மனதில் பயமிருக்கிறது அந்தப்பயத்தைவிட்டுவிடவும் உன் பந்துக்களுடன் கூடிவாழவும் நலம் நீ முன்செய்த தொழிலை விட்டிருக்கிறாய் அதைச் செய்யவும் சுகமாகும்.

தொடுகுறி சாஸ்திரம் முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

நன்மை தீமை அறியும்படியான இராமதேவர் ஆஞ்சநேயருக்கு உபதேசித்த

உத்தம மத்திப சாஸ்திரம்.



220	130	64	432	610	216
5	27	72	520	433	172
8	45	37	96	412	
10	14	54	134	418	
112	56	84	214	334	

இந்த உத்தம மத்திப சாஸ்திரம் பார்க்கப்பட்டவர்கள் சிறுகுழந்தைகள் கையில் ஒரு புஷ்பத்தைக்கொடுத்து புஷ்பத்தால் இந்த நெம்பரில் ஏதாகிலும் ஒன்றைத்தொடச்சொல்லி அந்த நெம்பர் பிரகாரமெடுத்து வாசித்துப் பார்த்தால் நன்மைதீமையெளிதிலறிந்துகொள்ளலாம்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

உத்தம மத்திப சாஸ்திரம்.

5 அனுமார் எழுபதுவெள்ளஞ்சேனையை யோடிமடக்கி அஞ்சாதேயென்று நிறுத்தினவிடம் ஆகையாலிது நன்று.

8 இராமசுவாமி வனவாசம் போனவிடம் ஆகையால் மனதில் நினைத்தகாரியம் அனுகூலமாகாது.

10 அனுமார் லங்காபுரியை தீயிட்டவிடம் மத்திபம்

214 இராவணனுக்கும் சுக்ரீவனுக்கும் மல்யுத்தம் இது நன்றல்ல ஆகையால் நினைத்தகாரியம் தாமசத்தில் கைகூடும்

112 வால்மீகவனத்தில் இராமசுவாமி வனபோஜனஞ் செய்தவிடம் இது மகா நல்லது நினைத்தகாரியம் கைகூடும்

130 சீதாதேவி சிறையிருந்தவிடம் இது ஆகாது நினைத்த காரியம் பலியாது மத்திபம்

27 இராமசுவாமியும் இலட்சுமணரும் இரகசியம் பேசியவிடம் இது உத்தமம்.

45 இராமசுவாமிக்கும் சுக்ரீபனுக்கும் வாக்குவாதமான விடம் இது உத்தமம்

54 இராவணன் சடாயுபட்சியை மடக்கிப் போர்செய்தவிடம் யிது ஆகாது மத்திபம்.

14 அங்கதன் தூதுபோனவிடம் லாபமுண்டு உத்தமம்.

61 இராமசுவாமி தாடகையை ஜெயித்தயிடம் அனுகூலமாகும் மகா உத்தமம்.

72 இராமசுவாமி கையால் கும்பகர்னன் மாண்டயிடம் ஆகாது மத்திபம்.

37 விபீஷணனுக்கு பட்டங்கட்டின யிடம் இதுமகா நல்லது மகா உத்தமம்.

56 இராவணன் சீதையை யெடுத்துக்கொண்டு போனயிடம் இது மத்திபம்.

84 இராவணன் சீதாதேவியை சிறையில் வைத்தயிடம் நினைத்த காரியம் செயமில்லை பயமுண்டு.

432 இராமசுவாமி மிதிலைக்குப்போகும்போது கற்சிலையைப் பெண்ணாக்கியவிடம் உத்தமம்.

20 இராமசுவாமிக்கும் பரசுராமருக்கும் தற்கம்நடந்தயிடமாகாது மத்திபம்.

96 இராமசுவாமி தபசுபண்ணினயிடம் ஆலசியத்திலே அனுகூலமுண்டு.

134 இராமசுவாமி சீதாதேவியைப்பறிகொடுத்து மனவியாகூலமானவிடம் நன்மையில்லை.

142 இலட்சுமணப்பெருமாள்இந்திரசித்தை செயித்தயிடம் உத்தமம்

610 இராமசுவாமி சீதாதேவியைச் சிறைமீட்டியவிடம் தாமிஷத்தில் அனுகூலம்.

334 அனுமார் அசோகவனத்திற்குப்போய் சீதையைக் கண்டு திருவாழிமோதிரங் கொடுத்தயிடம் அது உத்தமம்.

412 ஸ்ரீராமர் சீதாதேவியைக்காணுமல் மனந்திகைத்து நின்றயிடமாகையால் நினைத்தகாரியம் துயரமுண்டு பொல்லாங்குவரும் ஜெயமில்லை.

418 அனுமார் அசோகவனத்தை அழித்தயிடம் மத்திபம்.

216 கிருஷ்ணசுவாமி பவளக்கொடியாள் பாளையத்தை சதண்டு கொட்டி மாளச்செய்தது மத்திபம்.

272 இராவணன் சீதையைச்சிறையெடுத்தயிடம் தாமிஷத்தில் அனுகூலமாகும்,

220 இராமர் ஆஞ்சநேயருக்கு ரகசியம் உபதேசித்தயிடம் இது மகா உத்தமம்.

உத்தம மத்திப சாஸ்திரம் முற்றிற்று.

பாண்டவர் வைகுந்தமடைந்த நாடகம்	0	6	0
பட்டினத்தார் நாடகம்	0	6	0
மயிலிராவணன் மோட்ச நாடகம்	0	6	0
பத்மாசூர சம்மார நாடகம்	0	6	0
கண்ணப்ப நாயனார் நாடகம்	0	6	0

புதிதாக வெளிவந்திருக்கும் பக்திரஸக் கீதங்கள்.

ஸ்ரீமான் மாம்பழக்கவிச்சிங்க நாவலரவர்கள் சகோதரர் குமாரர் மகா-ள-ள-ஸ்ரீ M. R. S. வேல்ச்சாமிக்கவிராயர் அவர்கள் இயற்றிய தண்டபாணித் தெய்வரஞ்சித மேனும் பக்திரஸக்கீர்த்தனம் முதற்பாகம் விலை 0—5—0

ஷை இரண்டாம்பாகம் ... 0—5—0

மதுரை, சபாரஞ்சித R. V. சக்திவேலாச்சாரியாரவர்கள் இயற்றிய குமாரக்கடவுள் பஜனாமிர்தம் புதிதாக வெளிவந்தது ... 0—5—0

ஷை யாரியற்றிய வேணுகானம் என்ற நூதனபக்திரஸக்கீர்த்தனம் ... 0—5—0

உத்தமபாளையம் டிராமா உபாத்தியாயர் U. P. காமாக்ஷிபிள்ளை அவர்கள் இயற்றிய விநோத பரமானந்தக் கீர்த்தனம் ... 0—5—0

ஷை யாரியற்றிய இந்துதேசாபிமானிகள் இனிய ரமணியகீதம் ... 0—5—0

"இதுவரையிலும் வெளிவாதவை"

உலகப் பிரசித்திபெற்ற நாடகத்தலைமை ஆசிரியர்

ஸ்ரீலஸ்ரீ T. T. சங்கரதாஸ் சுவாமி அவர்களால்

இயற்றப்பெற்ற

நாடகச் சரித்திரங்கள்

1.	சத்தியவான் சாவித்திரி	0—8—0
2.	கோவலன்	0—7—0
3.	அல்லி	0—6—0
4.	பவளக்கொடி	0—6—0
5.	ஞானசௌந்தரி	0—7—0
6.	சாரங்கதரன்	0—6—0
7.	வள்ளி திருமணம்	0—5—0
8.	நல்லதங்காள்	0—7—0
9.	மயானகாண்டம்	0—8—0

மொத்தமாய் ஒரு செட் வாங்கிக்கொள்பவர்களுக்கு 9 புஸ்தகங்கள் சேர்ந்த செட் 1க்கு ரூ. 3...0...0. உடனே எழுதுங்கள்.

மு. கிருஷ்ண பிள்ளை,
பி. நா. கி. பிரதர்ஸ் ஏஜண்டு,
புக்ஷாப், மதுரை.